ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1782/41 - 2012 නොවැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2012.11.02
1782/41 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### உடதும்பர பிரதேச சபை

வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது வகுதியின் (VII) உப பிரிவின் (ஏ) பந்தியின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய உடதும்பர பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின்கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடதும்பர பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகளின் 6 ஆவது இலக்க வாடகை வாகனங்கள் நிறுத்தி வைப்பது தொடர்பான துணைவிதிகள், மேற்குறித்த துணைவிதிகள் செயற்படும் நாளிலிருந்து இந்த அறிவித்தல் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் உடதும்பர பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படமாட்டாது எனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
மத்திய மாகாண முதல் அமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.

மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2009, ஓகத்து 14.

**வாடகை மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குரிய துணைவிதிகள்**
**உடதும்பர பிரதேச சபை**

1. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 122 ஆம் கூற்றுக்கமைய வாசிக்கப்படவேண்டிய 126 (VII (ஏ)) வாசகத்திற்கமைய கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களுக்குக் கீழ் இவ் உபவிதிகள் விடுக்கப்படுகின்றது.

2. இவ் உப விதிகள் உடதும்பர பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வாடகை வாகனங்களை நிறுத்தி வைத்து அவற்றை பரிபாலித்தல், அவற்றை முறைப்படியிலாக்குதல், மேற்பார்வை செய்தல், கட்டணங்களை அறவிடல் என்பவற்றிற்குரிய துணைவிதிகள் என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

*3. இத்துணைவிதிகள் அமைச்சர் அவர்களினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்டுள்ள திகதி முதல் நடைமுறைக்கு வரும்.*

*4. பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டு தலைவரினால் கட்டளையிடப்படும் இங்கு முதலாம் அநுபந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களைத் தவிர்ந்த வேறு எந்த இடங்களிலும் வாடகை வாகனம் ஒன்றை வாடகைக்கு விடப்படும் நோக்கில் நிறுத்தி வைக்கப்படலாகாது. எனினும், சபையின் முன்மொழியப்பட்டு புது இடங்கள் குறிப்பிடப்படலாம்.*

*5. உடதும்பர பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் முதலாம் உப விதிகளுக்கேற்ப முதலாம் அநுபந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 2 ஆம் அநுபந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் ஒன்றை மாதாந்தம் சபைக்கு செலுத்துவதன் மூலம் அந்தந்த இடங்களில் வாடகை வாகனங்களை நிறுத்தி வைக்கப்படல் வேண்டும். அந்தக் கட்டணம் பற்றி அடிக்கடி சபை கூடி முடிவெடுப்பதன் மூலம் தீர்மானிக்கப்படும்.*

*6. பிரதேச சபை தலைவர் மூலமாகவோ அல்லது அவர் மூலம் அங்கீகாரம் பெற்றவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் அல்லாது எந்த நபராலும் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் உள்ள இங்கு முதலாம் அநுபந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் (திருத்தங்களுடன்) வாடகை வாகனங்களை மு. ப. 5.00 - பி. ப. 9.00 வரையிலான கால எல்லைக்கு நிறுத்தி வைக்கப்படலாகாது.*

*7. இந்த உப விதிகளுக்கமைய விநியோகிக்கப்படும் அனைத்து அனுமதிப்பத்திரங்களும் தலைவர் அவர்களினால் அல்லது அவரினால் அனுமதிக்கப்பட்ட ஒரு நபர் மூலமாக ஏற்கனவே இரத்துச் செய்யப்படாத நிலையில் குறிப்பிட்ட ஒரு மாத காலத்திற்காக விநியோகிக்கப்பட்டிருப்பின் குறிப்பிடப்பட்ட அம்மாத இறுதியில் இதற்கென ஒதுக்கப்பட்ட காலம் முடிவடைந்துவிடும்.*

*8. அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக்கொள்ளாத மூன்றாவது அநுபந்தத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மாதிரியிலான விண்ணப்பப்படிவம் ஒன்றை உடதும்பர பிரதேச சபையில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் சகல அனுமதிப்பத்திரங்களையும் தலைவர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தலைவர் அவர்களினால் வினவப்பட்டுள்ள சகல விவரங்களும் அவ் விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.*

*9. வாடகை வாகனம் நிறுத்தப்படும் இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனத்தின் உரிமையாளரிடம் அல்லது சாரதியிடம் அந்த வாகனம் பற்றிய அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கும்படி பொலிஸ் அதிகாரி ஒருவர் அல்லது வாகனங்களை மேற்பார்வையிடும் மேற்பார்வையாளர் ஒருவர் அல்லது தலைவரினால் நியமனம் செய்யப்பட்ட அங்கீகாரம்பெற்ற ஒருவர் கோரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர்களிடம் உள்ள அனுமதிப்பத்திரங்களை பரிசீலனைக்காக சமர்ப்பித்தல் வேண்டும்.*

*10. ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதிக்கு முன் வாகனங்கள் நிறுத்துவதற்கான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஒரு தடவையில் ஒரு மாதத்திற்குரிய செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் மட்டுமே விநியோகிக்கப்படும்.*

*11. வாடகை வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்கு கொண்டு செல்லும் முன்னர் அதற்குரிய விண்ணப்பபடிவமொன்றை சபைக்கு சமர்ப்பித்து அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட பின்னரே வாகனத்தை நிறுத்த வேண்டும்.*

*12. வாகனத் தரிப்பிடங்களில் இருந்து நிலையாக வாகனங்களை அப்புறப்படுத்திக் கொள்வதனால் அல்லது வாகனங்களை பழுது பார்ப்பதற்காக இரண்டு வாரங்களுக்கு அப்பாற்பட்ட காலம் தற்காலிகமாக அப்புறப்படுத்திக் கொள்வதனால் அல்லது அப்புறப்படுத்தப்பட்ட உடனே அது பற்றி இக்காரியாலயத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்படாவிட்டாலும் வாகனத்திற்குரிய குறிப்பிடப்பட்ட கட்டணம் அறவிடப்படும்.*

*13. வாடகை வாகனங்களை வாகனம் நிறுத்தும் இடத்தில் பழுது பார்க்கக்கூடாது. அதே போன்று வாகனங்கள், நிறுத்தப்படும்பொழுது ஏனைய வாகனங்களுக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படாத விதத்தில் திருத்திக்கொள்ளப்படல் வேண்டும்.*

*14. வாடகை வாகனம் நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வாகனம் ஒன்றை எவராலும் கழுவுவதற்கோ மற்றும் ஒரு நபர் ஊடாக கழுவுவிப்பதற்கோ இடமளிக்கப்படமாட்டாது.*

*15. யாராவது ஒருவர் வாடகை வாகனம் நிறுத்தப்படும் இடத்தில் அல்லது வாகனம் ஒன்றுக்குள் மது போதையில் ஆபாசமாக அல்லது அசோபனமாக நடந்து ஏனையோர்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படலாகாது.*

16. மேல் குறிப்பிடப்பட்ட 1- 15 வரையிலான எந்த ஒரு உப விதிகளையும் மீறும் அனைவரும் குற்றவாளியாக கணிக்கப்படும் சந்தர்ப்பங்களில் சட்டப்படி அதிகாரம்பெற்ற நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாக்கப்படுவோர் பின்னர் ரூபா 750 க்கு குறையாத தண்டப்பணம் ஒன்றை செலுத்துதல் வேண்டும். மேலும் அத்தவறு பற்றி பரிசீலனை செய்யும் தலைவர் அல்லது தலைவரினால் நியமிக்கப்படும் அங்கீகாரம்பெற்ற அதிகாரியினால் கடிதம் மூலம் உரியவருக்கு அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவிக்கப்பட்ட பின்னர் அத்தவறு தொடர்ந்தும் நடைபெறுமாயின் அவ்வாறு தவறுகள் இழைக்கப்படும் ஒவ்வொரு நாட்களுக்கும் ரூபா 250 தண்டப்பணம் அறவிடப்படும். அத்தண்டப் பணங்கள் பிரதேச சபை பொது நிதியின் இருப்பில் வைப்புச் செய்யப்படும்.

17. சட்டப்படி அதிகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றம் ஒன்றினால் அந் நீதிமன்றம் மூலம் விதிக்கப்பட்ட வேறு ஏதாவதொரு தண்டனைக்கு மேலதிகமாக இவ் உப விதியை மீறிய குற்றத்திற்காக இரு தடவை அல்லது மூன்று தடவை குற்றவாளியாகக் காணப்பட்ட அனுமதிப்பெற்ற ஒருவரது அனுமதிப்பத்திரத்தைச் சட்டப்படி இரத்துச் செய்துவிட இயலும். மேலும் , அவ்வாறு இரத்துச் செய்யப்பட்டால் நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு அனுமதி பெற்றவர் உரித்துடையவராக மாட்டார்.

18. பதங்கள் பற்றிய விவரம் :

| | |
|---|---|
| "தலைவர்" என்பது | உடதும்பர பிரதேச சபை தலைவராகும். |
| "சபை" என்பது | உடதும்பர பிரதேச சபையாகும். |
| "அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்" என்பது | வாடகை வாகனம் நிறுத்தப்படும் இடத்திற்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் உடதும்பர பிரதேச சபை தலைவர் அவர்களினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட அதிகாரியாவார். |
| "மோட்டார் வண்டி" என்பது | பாதையில் பயன்படுத்தப்படுவதற்காக எனக் கருதப்படும் அல்லது தயாரிக்கப்பட்ட இயந்திரம் ஊடாக இயங்கும் ஒரு வாகனம் என்ற கருத்துறும். முச்சக்கர வண்டி லொறி, வேன், டிரக்டர், கார் டிரக் வண்டி அல்லது கை டிரக்டர், அதிஷ்ட சீட்டிழுப்பு வாகனம் , உல்லாச வாகனம் போன்றவை. |

**முதலாம் அட்டவணை**

அடையாளமிடப்பட்டுள்ள இடங்கள் :

1. மெதிவக சந்தி
2. உடதும்பர பொலிஸ் அருகே
3. ஆஸ்பத்திரி சந்தி
4. கூட்டுறவு கடை முன்
5. ஹுன்னஸ்கிரி - கெவுல்கம சந்தி
6. ஹுன்னஸ்கிரி - பம்பரபெத்த சந்தி
7. ஹுன்னஸ்கிரி எரிபொருள் நிலையம் அருகே

**இரண்டாம் அட்டவணை**

| | | |
|---|---|---|
| வாகனம் பதிவுகளுக்காக | ரூபா 500 | |
| முச்சக்கர வண்டிக்கு | ரூபா 100 | மாதம் ஒன்றிற்கு |
| லொறி ஒன்றிற்கு | ரூபா 100 | மாதம் ஒன்றிற்கு |
| வேன் ஒன்றிற்கு | ரூபா 100 | மாதம் ஒன்றிற்கு |
| டிரெலர் உடனான டிரக்டர் அல்லது டிரெக்டர் | ரூபா 50 | மாதம் ஒன்றிற்கு |
| மோட்டார் வண்டி ஒன்றுக்கு | ரூபா 50 | மாதம் ஒன்றிற்கு |

**மூன்றாம் அட்டவணை**

மாதிரி விண்ணப்பப்படிவம்

1. வாகன வகை இலக்கம் :----.
2. உரிமையாளர் பெயர் :----.
3. அறிமுக அட்டை இலக்கம் :----.
4. முகவரி :----.
5. சாரதியின் பெயர் :----.
6. முகவரி :----.
7. வாகனம் நிறுத்தி வைக்கும் இடம் :----.
8. எவ்வகை தேவைக்காக வாகனம் பயன்படுத்தப்படுகின்றது :----.

திகதி :----.

.......................................
லிண்ணப்பதாரியின் கையொப்பம்.

தலைவர் அவர்களின் சிபாரிசு.

திகதி :----.

..........................
தலைவர்.

11- 669

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.